**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.113 /2019**

Name : பழனி

Father/Husband Name : கோவிந்தசாமி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.12.2023

இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். வாதி, பிரதிவாதி ஆஜர்.

குறுக்கு விசாரணை

எனது தந்தையார் பெயர் கோவிந்தசாமி. 1ம் பிரதிவாதி மோகனரங்கம் 2ம் பிரதிவாதி மணி (எ) சுப்பிரமணி ஆகியோர்கள் எனது சகோதரர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்துக்கள் அனைத்தும் விவசாய நிலங்கள் மற்றும் வீடு என்றால் சரியல்ல விவசாய நிலங்கள். விவசாயநிலத்திற்கு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை கேட்டு தாக்கல செய்துள்ளேன். கோவிந்தசாமி நாயுடு உயிரோடு இருக்கும்போதே வாய்மொழியாக 40 வருடங்களுக்கு முன்பாக பாகப்பிாவினை நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன். அதன்படிதான் இன்றுவரை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். அந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் எனக்கும் மற்றும் இரண்டு பிரதிவாதிகளுக்கும் சொத்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

அந்த வாய்மொழியாக பாகத்தின்படி எனக்கு 1 ஏக்கர் 34 செண்ட் கொடுத்தார்கள். மோகரங்கதிற்கும் அதே அளவிற்கான 1 ஏக்கர் 34 செண்ட் கொடுத்தார்கள். எனக்கு கால் ஊனம் என்பதால் எனக்கு திருமணம் ஆகவில்லை என்பதாலும் எனக்கு மேற்சொன்ன 1 ஏக்கர் 34 செண்ட் நிலம் கொடுத்தார்கள். அப்படி எனில் எனக்கு அதிகமாக நிலம் கொடுத்தார்கள். மற்ற பிரதிவாதிகள் இருவருக்கும் எனுழன்னை விட குறைவாக கொடுத்தார்கள்என்றால் சரிதான். எனக்கு கொடுக்கப்பட்ட 1 ஏக்கர் 34 செண்ட் நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 295 பத்திரப்பதிவு செய்தது 53 மற்றும் 59 வருடப்படத்திரங்கள் கொடுத்தார்கள். எனக்கு கொடுத்த நிலத்தை நான் தான் அனுபவித்து வருகிறேன்.

பாகப்பிரிவினைக்கு பிறகு நான் தனிப்பட்ட சொத்து வாங்கினேனா என்றால் வாங்கினேன். அதே போல் மோகனரங்கமும் தனிப்பட்ட முறையில் சொத்து வாங்கினாரா என்றால் வாங்கினார். அதே போல் எனக்கு வீடு தனியாக உள்ளது மோகரங்கத்திற்கு தனியாக வீடு உள்ளது. குடியாத்தத்திருந்து சித்தூர் போகும் சாலையை ஒட்டி மோகனரங்கம் சர்வே எண்.331/1E நிலம்

வாங்கினார் அதே சர்வே எண்ணில் நானும் நிலம் வாங்கினேன். சர்வே எண். 331/1C-யில் நான் வாங்கிய நிலம். சர்வே எண். 333/1C நிலத்தை ஒட்டி சர்வே எண். 331/1C ஒட்டி எனக்கு ஒதுக்கப்பட்ட சர்வே எண். 330/3பி நிலம் உள்ளது. அதை ஒட்டி மணிக்கு சர்வே எண். 330/1F மற்றும் B மற்றும் D ஆகிய நிலங்கள் 2ம் பிரதிவாதி மணக்கு கொடுக்கப்பட்டது. மணியின் நிலத்தை ஒட்டி மோகரங்கத்திற்கு சர்வே எண். 330/1B மற்றும் 1 என்-ல் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால ் சரிதான். அதன்படி தான் நிலங்களை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். அப்படி எனில் இந்த வரைபடத்தின்படி தான் சொத்தை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான் பிரதிவாதி தரப்பில் சாதாராண மாதிரி வரைபடம் குறியீடு செய்யப்படுகிறது அது பி.வா.சா.ஆ1 ஆகும்.

எனக்கு பிரதிவாதிக்கும் பிரச்சனை என்ன என்றால் நிலத்திற்கு சென்று வருவதில் தான் பிரச்சனை என்றால் சரிதான். சாட்சி சொல்கிறார் அது நான் வாங்கிய நிலம். ஏற்கனவே எங்களுக்குள் பாகப்பிரிவினை நடந்து அதன்படி 40 வருடங்களாக நாங்கள் அவரவர்கள் சொத்தை அனுபவித்து வரும்போது, மீண்டும் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்தது தவறு என்றால் சரிதான். ஆனால் என் அப்பா பெயரில் இருந்த மனீ இணைப்பு எண்ணை முழுமையாக 1ம ் பிரதிவாதி முழுவதுமாக மாற்றிக்கொண்டு மின்சாரம் எடுக்ககூடாது என்கிறார்கள். வழிப்பிரச்சனை சம்மந்தமாக ஏற்கனவே என் மீது குடியாத்தம் மாவட்ட உரிமையியில் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு தாக்கல ் செய்த பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் ் செய்துள்ளேன் என்றால் சரிதான். உரிய பரிகாரம் கேட்காமல் தவறுதலாக பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல ் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சி சொல்கிறார் நான் அனுபவித்து வரும் வீட்டை பூட்டி விட்டார்கள்.

மின்சாரத்தையும் முழுமையாக மாற்றி கொண்டதாகவும் நான் அனுபவிக்கும் வீட்டை பூட்டிவிட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கில் கேட்டபடியும், என் முதல் விசாரணையில் கூறியபடியும் எனக்கு கிடைக்கக்ககூடியதல்ல என்றால ் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI — Digitally signed by G SANTHI

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்.